RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt20326

OPEN ACCESS

# வள்ளலாரின் வரலாறும் - தோற்றுவித்த அமைப்புகளும்

கோ. வசந்திமாலா [அ, *]

[அ] தமிழ்த்துறை, பூ சா கோ கலை அறிவியல் கல்லூரி, கோவை, இந்தியா

# History of Vallalar - Organizations He Founded

G. Vasanthimala [a, *]

[a] Department of Tamil, PSG College of Arts & Science, Coimbatore, India

* Corresponding Author: drvasanthimala06@gmail.com

Received: 08-03-2020
Accepted: 30-05-2020

Check for updates

**ABSTRACT**

Ramalingar's birth, his special qualities, his academic ability, his childhood events, his worship, the life of his followers, the organizations he founded, the miracles that happened in his life, the state of his attainment of Siddhi, the great Ramalinga who was not read. The life of such a blessed person. The organizations he established, the miracles that happened in his life, are worth knowing and enjoying for everyone. The book he composed is a 'Pa' garland called 'Thiruvarutpa'. All the auspicious events of Vallalar's life, who was incarnated as a soul blessed by God as a saint of the nineteenth century, were captured through his songs. He gained immortal fame by composing arutpa songs for the benefit of human birth. His great goodness, which included establishing a knowledge organization for the welfare of the soul, establishing a dharmasala to get rid of hunger and sorrow, and establishing a Sanmarga Sangam for collective worship and good fellowship, was also discovered through this study.

**Keywords:** Ramalingar, Worship, Thiruvarutpa, Sanmarga Sangam

## முன்னுரை

இராமலிங்கரின் பிறப்பு, அவரது சிறப்புக்கள், கல்வித் திறம், சிறுபிள்ளைப் பருவ நிகழ்வுகள் முதல் வழிபாடு, அடிகளின் இல்வாழ்க்கை, அவர் தோற்றிவித்த அமைப்புக்கள் அவரது வாழ்வில் நடந்த அற்புதங்கள், அடிகள் சித்தி பெற்ற நிலை ஆகியவற்றை ஆய்ந்து விளக்குவதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

ஓதாது உணர்ந்த உத்தமர் இராமலிங்கர். இத்தகைய அருளாலரின் இல்வாழ்வு. இவர் ஏற்படுத்திடுத்திய அமைப்புக்கள் வாழ்வில் நடந்த அற்புதங்கள் போறவை அனைவரும் அறிந்து இன்புறத்தக்கவையாகும். இயற்றிய நூல் 'திருவருட்பா' என்னும் 'பா' மாலை ஆகும்.

## இராமலிங்கரின் பிறப்பு

தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள மருதூர் என்னும் தலத்தில் சைவ வேளாண் குலத்தில் கருணீகர் மரபில் இராமையாப்பிள்ளைக்கும் சின்னமையாருக்கும் ஐந்தாவது மகவாக அவதரித்தார். கி.பி. 19 - ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றியவர்

இராமலிங்க அடிகளார் ஆவார். உடன் பிறந்தோர்கள்: இராமலிங்கருடன் பிறந்தவர்தள் நால்வர். அவர்களில் சபாபதி பரசுராமன் என்ற இருவரும் சகோதரர்கள். உண்ணாமுலை சுந்தரம் என்ற இருவரும் சகோதரிகள் ஆவார்கள். சிறப்புப் பெயர்: அடிகளுக்குப் பெற்றோர்கள் சூட்டிய பெயர் 'இராமலிங்கம்' என்பதாகும்.. இறைவனின் திருவருளால் பின்பு 'அருட்பெருஞ்சோதி வள்ளலார்' என்ற சிறப்புப்பெயரினைப் பெற்றார்.

## கல்வித் திறம்

இராமலிங்கப்பெருமான் பள்ளிப் பருவம் எய்தியதும் அவரது தமையனார் சபாபதிப்பிள்ளை தாமே கல்விப் பயிற்சியைத் தொடங்கி வைத்தார். பின்பு தமதாசிரியராகிய காஞ்சிபுரம் சபாபதி முதலியாரிடம் கல்வி கற்க அனுப்பினார். இளையவராகிய இராமலிங்கரின் அறிவுத்திறத்தையும், பக்குவநிலையையும், கண்ட மகாவித்துவான். இவ்விளையர் கல்லாது உணரவும் சொல்லாது உணர்த்தவும் வல்லவர் என உணர்ந்து கற்பிப்பதைக் கைவிட்டார். அடிகள் கற்க வேண்டியவற்றை இறைவனிடமே கற்றார். கேட்க வண்டியவற்றை இறைவனிடமே கேட்டார். .பெருமானின் கல்வியும், கேள்வியும் இறைவனிடத்துப் பெற்றதேயொழிய வேறு எவ்வாசிரியரிடத்தும் பெற்றதன்று. இறைவன் அடிகளைப் பள்ளியில் பயிற்றாது தனே கல்விப் பற்றார். என்பதனை,

'குமாரப் பருவத்தில் என்னைக் கல்வியிற்
பயிற்றும் ஆசிரியரை இன்றியே என் தரத்தில்
பயின்று அறிதற்கு அருமையாகிய கல்விப்
பயிற்சியை எனது உள்ளகத்தே இருந்து பயிற்றுவித்தருளினீர்'1 (திருவருட்பா - 1082)

என்று குறிப்பிடுகின்றார். மேலும்,

'கற்றதுநின் னிடத்தே பின் கேட்டது நின்னிடத்தே'2 (திருவருட்பா - 3044)

என்றும்,

'ஓதா துணர உணர்த்தி உளளேநின் றுளவு சொன்ன நீதா'3 (திருவருட்பா - 2775)

என்றும் அனைத்துக் கலைகளையும் இறைவன் தனக்கு ஓதாது உணர்த்தினான் என்பதை,

'ஓதுமறை முதற்கலைகள் ஓதாமல் உணர
உணர்விலிருந் துணர்த்தி'4 (திருவருட்பா - 3053)

என்ற பாடலில் விளக்குகிறார். இவ்வாறு அடிகளின் கல்வித்திறம் புலனாகின்றது.

## சிறுபிள்ளைப் பருவ அறிவாற்றல்

இறைவனால் ஒன்பதாம் அகவையில் ஆட்கொள்ளப் பெற்றவர் இராமலிங்கர். இவர் சிறுபிள்ளைப் பருவம் முதலே பாடல் செய்யத் தொடங்கினார். வுpளையாடித்திரியும் பிள்ழளைப் பருவம் முதலே அருட்பாடல்களைப் பாடும் வல்லமையினைப் பெற்றிருந்தார். இதனை,

'ஆண்டாறு மூன்றாண்டில் ஆண்டு கொண்ட அருட்கடலே'5 (திருவருட்பா -2697)

என்றும்,

'என்னை அறி யாப்பருவத் தாண்டு கொண்ட என்குருவே'6 (திருவருட்பா -2698)

என்றும், தமது பாடலடிகளின் மூலமாக வள்ளலார் கூறுகின்றார்.

## அடிகளின் முதல் வழிபாடு

சிறுபிள்ளைப் பருவத்தில் பள்ளிசென்று பயிலாதும், வீட்டில் தங்காதும் திரி;ந்த அடிகள் நாள்தோறும் கந்தக்கோட்டத்திற்குச் சென்று வழிபடுவதைத் தமது வழக்கமாகக் கொண்டிருந்தார். அடிகள் முதல் முதலில் பாடி வழிபட்டத் தலம் கந்தக்கோட்டமாகும்.; முதல் முதலாகப் பாடப்பெற்றது 'தெய்வமணி மாலை' என்னும் நூலாகும். ஆடிகளின் திரு வாக்கில் முதலில் பிறந்த சொல் 'திரு ஓங்கு' என்பதாகும்.

## இல்வாழ்க்கை

பன்னிரெண்டாடு ஆண்டு முதல் ஞானவாழ்க்கையில் ஈடுபட்டு மூவசையையும் துறந்து துறலோழுக்கம் பூண்டு வாழ்ந்த, இராமலிங்க அடிகள் 'இல்வாழ்க்கை' விருபம்பவில்லை. பிள்ளைப் பருவம் முதல் இல்வாழ்வை வெறுத்த அடிகள் தமது உற்றாரின் வற்புறுத்தலாலும், ஊழ்வினையாலும் திருமணத்திற்கு இசைந்து, தமது தமக்கை உண்ணாமுலை அம்மையாரின் மகள் 'தனம்மாளை' மணம் புரிந்தார்.

இருப்பினும் இவர் இல்வாழ்க்கையில் ஈடுபடவில்லை என்பதனை,

'தனித்தனி ஒருசார் மடந்தையர் தமக்குள்

ஒருத்தியைக் கைதொடச் சார்ந்தேன்

குனிந்த மற்றவரைத் தொட்டனன் அன்றிக் கலப்பிலேன்'7 (திருவருட்பா -3452)

என்ற பாடலடிகள் மூலம் கூறுகின்றார்.

## தோற்றுவித்த அமைப்புக்கள்

1. சன்மார்க்க சங்கம், 2.சத்திய தருமசாலை, 3.சத்திய ஞானசபை, 4.சித்திவாளகம் ஆகிய நிலையங்களை மக்களுக்குச் சேவை ஆற்றும் பொருட்டுத் தோற்றுவித்துச் செயல் படுத்தினார்.

## சுமரச சுத்த சன்மார்க்க சங்கம்

இராமலிங்க அடிகள் 'சமரச சுத்த சன்மார்கம்' என்ற நெறியினை ஏற்படுத்தினார். சுன்மார்கநெறிகள் : கடவுள் ஒருவரே என்றும், அவரை அன்பால் சோதி வடிவில் வழிபடவேண்டும் என்றும், சிறுதெய்வ வழிபாடும் அத்தெய்வங்களின் பேரால் உயிர்ப்பலி கூடாது என்றும், புலால் உண்ணாது சாதிமத வேறுபாடு இன்றி எவ்வுயிரையும் தம்முயிர் போல் என்னும் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையைக் கைகொள்ள வேண்டுமென்றும், ஏழைகளின் பசி தவித்தலாகிய சீவகாருண்ய ஒழுக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல்

என்றும் நெறிகள் அமைத்து சுமரச சுத்த சன்மார்க்கக் கொள்கைகளை ஏற்படுத்தினார். இக்கொள்கைகளைப் பின்பற்றவும் பரப்பவும் சமரச 'சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்' ஏன்ற சங்கத்தினை 1865 ஆம் ஆண்டில் அடிகள் நிறுவினார். இதனை

'சமரச சத்தியச் சபையில் நடம்புரி

சமரச சத்தியத் தற்சுயம் சுடரே

சபை என துளமெனத் தானமர்ந்து எனக்கே

அபயம் அளித்ததோர் அருட்பெருஞ்சோதி'8 (திருவருட்பா -அகவல் வரி- 53-56) எனக் குறிப்பிடுவதன் மூலம் அறியலாம்.

## சத்திய தருமச் சாலை

இராமலிங்க அடிகளின் கொள்கைகளில் தலையாயது சீகாருணியம். 'ஜீவகாருண்யம் என்பது ஜீவர்களுக்கு விசயமாக உண்டாகின்ற ஆன்ம உருக்கத்தைக்கொண்டு தெய்வ வழிபாடு செய்து வாழ்தலென்றிய வேண்டும். ஆன்ம உருக்கம் எப்போழுது உண்டாகுமெனில் ஜீவர்கள் பசி, தாகம், பிண,p இச்சை, எளிமை, பயம், கொலை இவைகளால் துக்கத்தை அனுபவிக்கக் கண்ட போதாயினும,; கேட்ட போதாயினும் இவ்வாறு உண்டாகுமென்று அறிந்தபோதாயினும் ஆன்ம உருக்கம் உண்டாகுமென்று அறிய வேண்டும்'. 9(திருவருட்பா - உரை நடைப் பகுதி ப.எ -7-8) இச்சீவகாருண்யத்தை அடிகள் இருவகையால் வற்புறுத்துவார்.

1. புலால் மறுத்தல்
2. அற்றார் அழிபசி தீர்த்தல்.

அற்றார் அழிபசி தீர்த்தலாகிய சீவகாருண்யப் பேரறத்தை நடத்துவதற்காக வடலூரில் சத்திய தருமச் சாலையை 1867 - ல் நிறுவினார். சாலையை நிறுவிய பின் அதனை உரைவிடமாகக் கொண்டார். 1870 ஆம் ஆண்டு வரை சாலையிலேயே உரைந்தார். 1867 ஆம் ஆண்டிலேயே திருவருட்பாவின் முதல் நான்கு திருமுறைகள் அச்சிடப்பெற்று வெளியானது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். சித்திவளாகம் அமைத்தல், தருமசாலையில் கூட்டம் பெருகவே அமைதியை விரும்பித் தனித்து உறையக் கருதி வடலூருக்குத் தெற்கே இரண்டு கல் தொலைவிலுள்ள மேட்டுக்குப்பத்திற்குச் சென்று அங்கே உறையத் தொடங்கினார்கள். மேட்டுக்குப்பத்தில் அடிகள் உறைந்த திருமாளிகைக்கு 'சித்திவளாகம்'என்று பெயர். இப்பெயர் அடிகளே இட்டது. சித்தியை அதாவது வீடுபேற்றைத் தரும் இடம் என்பது இதன் பொருளாகும். இதனையே அடிகள்

'சித்திக ளெல்லாம் தெளிந்திட எனக்கே

சத்தியை அளித்த தயவுடைத்தாயே

சித்தி சத்தர்கள்எலாம் சார்ந்தெனது ஏவல்செய்

சித்தியை அளித்த தெய்வ நற்றாயே' 10 (திருவருட்பா -அகவல் வரி.எ-1095-1098)

## சத்திய ஞானசபை

ஒளி வடிவில் (அருட்பெருஞ்சோதி) கண்ட அடிகள் சத்திய ஞான சபையை அமைத்தார். இச்சபையை 'இயற்கை விளக்கம்' என்பர் அடிகள். மேலும் அகத்தே காணுதற்கரிய அனுபவத்தைப் புறத்தே பாவனையாகக் காட்டுவதே சத்திய ஞானசபையாகும்.

உயிர்களிடத்திலுள்ள அஞ்ஞானமாகிய திரைகள் நீக்கப்பெற்றால் ஆன்ம ஒளியாகிய

அருட்பெருஞ்சோதியைத் தரிசிக்கலாம் என்பதை உட்கருத்தாகக் கொண்டு வெளவேறு நிறமுள்ள ஏழு திரைகளும் நீக்கப்பெறுகின்றன. இதனை,

'கரைவிமா மாயைக் கரும்பெரும் திரையால்
அரைசது மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
பேருறு நீலப்பெருந்திரை அதனால்
ஆருயிர் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி
பச்சைத் திரையால் பரவெளி அதனை
அச்சுற மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி;
செம்மைத் திரையால் சித்துரு வெளியை
அம்மையின் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி;
பொன்மைத் திரையால் பொருளுருவெளியை
அன்மையின் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி;
வெண்மைத் திரையால் மெய்ப்பதி n;வளியை
அண்மையின் மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி;
கலப்புத் திரையாம் கருது அனுபவங்களை
அலப்புற மறைக்கும் அருட்பெருஞ் ஜோதி;'11 (திருவருட்பா -அகவல் வரி.எ-813-826)

என்று குறிப்பிடுகின்றார். இவ்வெழு திரைகளும் மனத்தினை மூடியுள்ளவை. இறைவனை அறியவிடாது தடுப்பவை ஆகும். இதனை முறையே கருப்புத்தரை நீலத்தரை, பச்சைத்திரை, செம்மைத்தரை, பொன்மைத்தரை, வெண்மைத்தரை, கலப்புத்தரை என்று அடிகள் அகவல் வரிகளில் குறிப்படக் காணலாம்.. ஏழு திரைகளையும் விலக்கியே இறைவனிடம் மனத்தைச் செலுத்த வேண்டும். இதன் பயனாய் ஆன்மா பக்குவம் அடையும்.

## சன்மார்க்கக் கொடியும் அதன் அமைப்பும்

ஞானிகள் எவரும் தமது கொள்கைக்கென்று தனிக்கொடி காணாநிலையில் இராமலிங்க அடிகளார் தமது மார்க்கத்திற்குத் தனிக்கொடியினைக் கண்டார். மஞ்சள் வெள்ளை எனும் இருநிறங்கள் கொண்ட இக்கொடிக்குச் 'சன்மார்க்கக் கொடி' என்று

**பெயரிட்டார். இக்கொடி சித்திவளாகத்தில் முதன் முதலில் 1873ஆம் ஆண்டு ஏற்றப்பட்டது. கொடி ஏற்றியதும்**

**'ஜோதிக் கொடியே ஆனந்த**

**சொரூபக் கொடியே'12 (திருவருட்பா- சிற்சத்தி வணக்கம் பா-எ -1)**

**என்று துவங்கும் பாடலைப் பாடும் முறையினை ஏற்படுத்தினார்.**

## வள்ளல் பெருமானின் வாழ்வில் நடந்த அற்புதங்கள்

**இராமலிங்க அடிகளின் வாழ்வில் பல அற்புதங்கள் நிகழ்வுகள் இறைவனது திருவருளால் நிகழிந்துள்ளன. அவை ஐந்து திங்கள் பருவத்திலேயே சிதபர இரகசியம் வெட்ட வெளியாகப் புலப்பட்டது. கண்ணாடியில் முருகன் தோன்றிக் காட்சியளித்தது. இறைவி வடிவடைநாயகி அண்ணியார் வடிவில் தோன்றி உணவளித்தது. தண்ணீரில் விளக்கெரத்தது. கனவிலும் நனவிலும் பல சமங்களில் பல இடங்களில் இறைவன் தோன்றி அருள் புரிந்தது எனப் பல அற்புதங்கள் இறை அருளால் அடிகளார் வாழ்வில்; நிகழ்தன.**

## சிதம்பர இரகசியம் காண்டல்

**இறைவன் ஐம்பூதங்களாக உருவகம் செய்யப்பட்டு ஐம்பூததிற்க்கும் ஐந்துதலங்கள் சிறப்பாகக் கூறப்படுகின்றன. அவ்வகையில் சிதம்பரத்தில் இறைவன் சுத்த வெளியாகக் காட்சியளிக்கிறான் என்பது ஆன்றோர்களின் அனுபவ உண்மை. இத்தகைய சிதம்பர இரகசியத்தைத் தீட்சிதர் திரையை விலக்கிக் காட்ட அனைவரும் தரிசிததனர். ஐந்துதிங்கள் குழவியாயிருந்த அடிகட்கு வெட்ட வெளியாய் புலப்பட்டது. இதனை அடிகளே,**

**'தூய்முதலோ ரொடுசிறிய பருவமதில்தில்லைத்**

**தலத்திடையே திரைதூக்க தரிசித்தபோது**

**வேய் வகைமேல் காட்டாதே எந்தனுக்கே எல்லாம்**

**வெளியாக் காட்டிய என் மெய்உறவாம் பெருமானே'13**

**(திருவருட்பா- அருள்விளக்கமாலை.பா-எ -44) என்று பாடுகிறார்.**

## கண்ணாடியில் காட்சி பெறல்

**இராமல்ங்க அடிகளார் தமது தமையனார் சபாபிப் பிள்ளையின் வீட்டிலிருந்த பொழுது முருக உபாசனையில் முனைந்து ஆடுபட்டார். ஊறக்கமும் உணவும் அறையிலேயே கொண்டு பல நாள் தியான நிலையில் இருக்கையில் ஒரு நாள் சுவரிலிருந்த கண்ணாடியில் தனிகை முருகன் தோன்றிக் காட்சியளித்தான். இதனை 'சீர்கொண்ட' எனத்தொடஙகும் பாடலில்**

**'கூர்கொண்ட வேலும் மயிலும்நற் கோழிக் கொடியும் அருட்**

கார்கொண்ட வன்மைத் தணிகா சலமும்மென் கண்ணுற்றதே'14
(திருவருட்பா- பிரார்த்தினைமாலை.பா-எ -42)

என்று பாடி வியப்பதன் மூலமும் அறியலாம்.

## நீரால் விளக்கெரித்தது

பெரிய புராணத்தில் குறிப்பிடப்படும் அறுபத்து மூன்று நாயன்மார்களும் இறைவன் மேலும், இறைவியின் மேலும் இறையடியார்கள் மேலும் கொண்ட பக்தியினாலேயே இறைவனால் ஆட்கொள்ளப்பட்டனர். அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான கலிய நாயனார் கோயிலில் இறைவனுக்கு விளக்கு ஏற்றும் சிவ பணியை மேற்கொண்டார். இப்பணியைத் தொடர்ந்து செய்து வந்தார். ஒரு நாள் விளக்குக்கு எண்ணெய் இல்லாது போனது விளக்கிற்கு இரத்தை;தை விடுவதற்காகத் தன் கழுத்தை அரிந்தார். இதனால் இறைவன் காட்சி கிடைக்கப் பெற்றார். சுpவ பதமு; அடைந்தார். ஆனால் இராமலிங் அடிகளார் ஒரு நாள் திருப் பாடல்களை இரவு முழுவதும் எழுதிக்கொண்டிருந்தார். அவ்வேலையில் எண்ணெய் என நினைத்து அருகிலிருந்த நீர்ச்சொமபிலிருந்த நீரினை விளக்குற்கு ஊற்றினார். விடியும் வரை அவ்விளக்கும் எர்ந்தது. இதனைத் தன் பாடலில்

'செய்விளக்கும் புகழுடைய சென்னநகர்

நுண்பர்களே செப்பக்கேளீர்

நேய் விளக்கே போனறதொருத ணீர்

வுpளக்கும் எரித்தது சந்நிதின் முன்னே'15

(திருவருட்பா- அருள்விளக்கமாலை.பா-எ 01)

என்றும்

"தண்ணீர் விளக்கெரித்த தன்மைபோல் மாந்தர்கள்தம்'16 (திருவருட்பா-திருஅமுதத் திரட்டு பா.எ-02) ஏன்றும் பாடுவதன் மூலம் புலப்படுகிறது.

## இறைவி உணவளித்தது

சிறு பிள்ளைப் பருவத்தில் பசியால் அழுத திருஞானசம்பந்தருக்கு இறைவனின்ஆணையால் ஞானப்பால் ஊட்டினால் இறைவி. அது போன்று பனிரு வயது முதலே ஞானவாழ்வை மேற்கொண்டிருந்த அடிகள் நாள்தோரும் திருவொற்றியூர் சென்று தியாக்பெருமானையும் வடிவுடையமையையும் வழிபட்டு வந்தார். ஒரு நாள் இரவு ஒறியூர் சென்றுவட்டுக் காலங்கடந்து திரும்பி வந்து வீட்டுத் திண்ணையில் பசியோடு படுதடுத்தயந்தபோது வடிவுடையம்மை அண்ணியார் வடிவில் அமுதளித்து அருளினார். இதனை அடிகள்

'தெற்றியிலே நான்பசித்து படுத்திளைத்த தருணம்

திருஅமுதோர் திருக்கரத்தே நிகழ்வளித்து எடுத்தே

ஒற்றியிற்போய் பசித்தனையோ என்று எனை அங்கு எழுப்பி

உவந்துகொடுத் தருளியஎன் உயிக்கிதாந் தாயே'17

(திருவருட்பா- அருள்விளக்கமாலை.பா-எ 43) என்று பாடுகிறார்.

## சித்தி பெற்றநிலை

இராமலிங் அடிகளார் சுத்ததேகம,; பிரணவதேகம், ஞானதேகம் என்ற மூவகை தேகசுத்திகளையும் பெற்றவர். தேகசித்தி பெற்றவரகளது நிலத்தில் வீழாது. ஆவை வெளியாய்அருளில் கலக்கும் என்பர். நித்தியதேகம் பெற்ற அடிகள் 1874 ஆம் ஆண்டு 19 ஆம் நாள் தைப்பூச நாளில் இறைவனோடு இரண்டறக் கலந்தருளினார்.

'தோன்றின் புகழோடு தோன்றுக அ.;.தில்லார்

தோன்றலின் தோன்றாமை நன்று'18 (திருக்குறள் - 236)

என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கு ஏற்ப புகழுடன் தோன்றி நிலையான இடம் பெற்றவர் இராமலிங் அடிகளார் ஆவார்.

## முடிவுரை

வள்ளலார் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தீர்க்கதரியாக இறையருள் பெற்ற ஆன்மாவாக அவதரித்த அவரது வாழ்வின் அட்பதங்கள் அனைத்தும் அவரது பாடல்க் வழி பெறப்பட்டது. மேலும் சுத்த ஞானியாக, சமுகக் காப்பாளராத்தொன்றி ஆன்மாக்களின் மலம் நீங்கி சுத்த தேகம் பெற்று, மனிதப்பிறப்பின் பயனைப்பெற அருட்பாப் பாடல்டகளை இயற்றி அழியாப்புகழ் பெற்றவர். ஆன்ம நலம் பெற ஞான அமைப்பையும், பசியாரவும் வருமை நீங்கவும் தருமசாலை அமைத்து, கூட்டு வழிபாட்டையும், நல்லினக்கத்தையும் பெற சன்மார்க்க சங்கத்தையும் ஏற்படுத்திய அவரது உயரியநல்லினக்கமும் இவ்வாய்வின் வழி கண்டறியப்பட்டது.

## References

[1] Arutprakasa Vallalar, (1989) Thiruvarutpa (First Five Thirumurais), Samarasa Sanmar Research Institute, Tiruchirappalli.
[2] Arutprakasa Vallalar, (1999) Sixth Thirumurais, Deivanilayam, Vadalur.
[3] Arutprakasa Vallalar, (2003) Thiruvarutpa Prose, Manumuraikanda Vasakam, Jeevakarunyam Bharathi Press, Mayiladuthurai.
[4] Thiruvalluvar, (1992) Thirukkural, (Parimerazhagar's text), Society Publication, 1-4, Prakasam Salai, Chennai.

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2020. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License